RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-4 | இதழ்- 292 | அக்டோபர்.23 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5









## ‘டெல்டா விவசாயிகளுக்கு இது கண்ணீர் தீபாவளி’ தஞ்சையில் கள ஆய்வு செய்த இபிஎஸ் ஆதங்கம்

தஞ்சாவூர், அக்.23-

டெல்டாவில் நெல் கொள்முதல் செய்யாததால் விவசாயிகளுக்கு இந்தாண்டு கண்ணீர் தீபாவளியாக இருந்தது என அதிமுக பொதுச் செய லாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி முழுவீ ச்சில் நடைபெற்று வருகிறது. அறுவடை செய்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விற்பனை செய்ய கொண்டு வந்து குவித்து வைத்துள்ளனர். கொள்முதல் நிலையங் களில் லாரிகள் முறையாக இயக்கம் செய்யப்படாததால், கொள்முதல் நிலைய ங்களில் நெல் மூட்டைகள் ஆயிரக்கணக்கில் தேங்கியுள்ளது.


அதே போல் தொடர் மழையின் காரண மாக சம்பா நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நெல்லை உடனடியாக கொள்முதல் செய்யாததால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஈரப்பதம் அதிகரித்துள்ளதால் 22 சதவீதம் அளவுக்கு நெல் கொள்முதல் செய்ய வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி இன்று தஞ்சாவூர் அருகே காட்டூர், மூர்த்தியம்பாள்புரம் ஆகிய இடங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களை நேரில் பார்வையிட்டு, விவசாயிகளிடம் மழை பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி, “விவசாயிகளின் துயர் துடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்க அரசுக்கு வலியுறுத்துவேன். உடனுக்குடன் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். நானும் ஒரு விவசாயி தான். அதனால் விவசாயிகள் படும் கஷ்டங்கள் எனக்கு அனைத்தும் தெரியும். விவசாயிகளின் கண்ணீர் துடைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தினமும் 2,000 மூட்டைகள் கொள்முதல் செய்வதாக அரசு அறிவித்து இருந்தது. ஆனால், நேரடியாக விவசாயிகளிடம் கேட்ட போது வெறும் 800 நெல் மூட்டைகள் தான் கொள்முதல் செய்வதாக தெரிவிக்கின்றனர். தமிழக அரசு தவறான தகவலை கூறி விவசாயிகளை ஏமாற்றுகிறது, எனவே, விவசாயிகளுக்கு இந்த தீபா வளி கண்ணீர் தீபாவளியாக தான் உள்ளது” என்றார்.

## குருவாயூர் கோயில் பொக்கிஷங்களுக்கு முறையான ஆவணங்கள் இல்லை: தணிக்கை அறிக்கையில் அம்பலம்



திருவனந்தபுரம், அக்.23-

கேரளாவில் உள்ள குருவாயூர் கோயிலுக்கு சொந்தமாக தங்கம், வெள்ளி ஆபரணங்கள், பாத்திரங்கள், தந்தம், பக்தர்கள் காணிக்கையாக அளிக்கும் பொருட்கள் அதிகளவில் உள்ளன. ஆனால், இந்த பொக்கிஷங்களுக்கான ஆவணங்கள் சரியாக பராமரிக்கப்படாததால், முறைகேடுகளுக்கான வாய்ப்பு அதிகம் உள்ளது என குருவாயூர் தேவசம் வாரியத்தின் தணிக்கை அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

குருவாயூர் தேவசம் வாரியத்தின் புன்னத்தூர் கோட்டா சரணாலயத்தில் கடந்த 201920ம் ஆண்டு அறிக்கையில் 522.86 கிலோ தந்தம் மற்றும் தந்தப் பொருட்கள் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டப்படி தந்தம் வனத்துறையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு ஒப்படைக்கப்படவில்லை என வனத்துறை அதிகாரி தெரிவிக்கிறார்.

கோயிலுக்குள் இருக்கும் தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் குறித்த பதிவேடுகளை ஆய்வு செய்தபோதும் அதில் பல குறைகள் உள்ளன. கோயில் உபயோகத்துக்காக பயன்படுத்தப்பட்ட தங்கம் வெள்ளி பொருட்களின் எடைகள் குறைவாக உள்ளன. கோயிலில் இருந்த தங்க கிரீடம், வெள்ளி ஆபரணமாக மாற்றப்பட்டுள்ளது. கோயிலில் இருந்த 2.65 கிலோ வெள்ளி பாத்திரத்துக்கு பதில் 750 கிராம் எடையுள்ள பாத்திரம் மாற்றப்பட்டுள்ளது. இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குருவாயூர் தேவசம் சட்டம் 1978 மற்றும் 1980ம் ஆண்டு விதிமுறைகள் படி கோயில் பொக்கிஷங்கள் ஆண்டுதோறும் சரிபார்க்கப்பட வேண்டும் என்பது கட்டாயம். ஆனால் அதுபோன்ற சரிபார்த்தல் நடவடிக்கை கடந்த 40 ஆண்டுகளாக நடைபெறவில்லை என தணிக்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 30ம் தேதிக்குள் கோயில் பொக்கிஷங்கள் ஆய்வு செய்யப்பட்டு தேவசம் வாரிய ஆணையரிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்ற உத்தரவும் பின்பற்றப்படவில்லை.

# தீபாவளி வாழ்த்து கூறிய ட்ரம்ப்; நன்றி சொன்ன மோடி வரி விதிப்பு குறித்து மவுனம்!



புதுடெல்லி: அக்.23-

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தீபாவளி அன்று தனக்கு தொலைபேசியில் பேசி வாழ்த்து தெரிவித்ததை உறுதிப்படுத்திய பிரதமர் மோடி, அவருக்கு நன்றி தெரிவித்தார். இருப்பினும், ரஷ்ய எண்ணெய் விவகாரம், வரிகள் மற்றும் வர்த்தகம் போன்ற பிரச்சினைகள் குறித்து அவர் எதுவும் குறிப்பிடவில்லை.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘ அதிபர் ட்ரம்ப், உங்கள் தொலைபேசி அழைப்பு மற்றும் அன்பான தீபாவளி வாழ்த்துக்களுக்கு நன்றி. இந்த தீபத் திருநாளில், நமது இரண்டு பெரிய ஜனநாயக நாடுகளும் நம்பிக்கையுடன் உலகை ஒளிரச் செய்யட்டும், பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் எதிர்த்து ஒற்றுமையாக நிற்கட்டும்’ என்று தெரிவித்தார்.

வர்த்தகம், வரிவிதிப்பு, எச்1பி விசா, ரஷ்யா எண்ணெய் கொள்முதல் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக அமெரிக்க இந்தியா உறவு மோசமான நிலையை அடைந்துள்ள நேரத்தில், இரு தலைவர்களுக்கும் இடையிலான இந்த பேச்சு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது.

முன்னதாக, அக்டோபர் 21 அன்று பிரதமர் மோடியுடன் பேசிய பின்னர் ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், ‘நாங்கள் நிறைய விஷயங்களைப் பற்றி பேசினோம், பெரும்பாலும் வர்த்தக உலகம் பற்றி பேசினோம். அவர் ரஷ்யாவிலிருந்து இனி அதிகம் எண்ணெய் வாங்கப் போவதில்லை. என்னைப் போலவே அந்தப் போர் முடிவடைவதையே அவரும் காண விரும்புகிறார்’ என்று தெரிவித்தார்.

# நெல் மூட்டைகள் தேங்க மத்திய அரசின் காலதாமதமே காரணம்: தஞ்சையில் அமைச்சர் சக்கரபாணி விளக்கம்



தஞ்சாவூர், அக்.23-

“விவசாயிகளிடம் பெறப்பட்ட நெல்லில், அரிசி அரவையின் போது கலக்கப்பட வேண்டிய செறிவூட்டப்பட்ட அரிசி வழங்க மத்திய அரசு அனுமதி அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் தான் நெல் மூட்டைகள் தேங்க காரணம்.” என தமிழக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி விளக்கமளித்துள்ளார்.

தஞ்சாவூர் பிள்ளையார்பட்டி நெல் சேமிப்பு கிடங்கில் தமிழக உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் பார்வையிட்டு இன்று காலை ஆய்வு செய்தனர்.

பின்னர் அமைச்சர் அர.சக்கரபாணி செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் இந்த ஆண்டு வரலாற்றில் இல்லாத வகையில் நெல் விளைச்சல் அதிகம். தஞ்சாவூர் மாவட்டத்தை பொருத்தவரையில் இந்த ஆண்டு 299 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இதுவரை 1.06 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இன்னும் 50 ஆயிரம் மெ.டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட வேண்டி உள்ளது.

இந்த ஆண்டு சாகுபடி பரப்பு கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது. தினமும் 1,250 லாரிகளில் வெளி மாவட்டங்களுக்கு நெல்மூட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் ரயில் வேகன்கள் மூலமும் நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. 16 லட்சம் சாக்குகள் கையிருப்பு உள்ளது. இன்னும் 66 லட்சம் சாக்குகள் வரவேண் டியுள்ளது. சணல் இருப்பும் போதிய அளவில் கையிருப்பு உள்ளது.

விவசாயிகளிடம் பெறப்பட்ட நெல்லில், அரிசி அரவையின் போது கலக்கப்பட வேண்டிய செறிவூட்டப்பட்ட அரிசி வழங்க மத்திய அரசு அனுமதி அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் தான் நெல் மூட்டைகள் தேங்க காரணம்.

அதாவது 100 கிலோ அரிசியில் 1 கிலோ செறிவூட்டப்பட்ட அரிசி கலக்க வேண்டும். இதற்கான விதிமுறைகளை மாற்றி கடந்த 2972025 அன்று மத்திய அரசிடம் இருந்து தமிழக அரசுக்கு கடிதம் வந்தது. பின்னர் டெண்டர் விடப்பட்டு 5 ஒப்பந்தக்காரர்கள் மூலம் விவசாயிகளிடம் பெறப்பட்ட 34 ஆயிரம் டன் நெல்கள் வாங்கிய நிலையில் அவற்றில் 100 கிலோ அரிசிக்கு 1 கிலோ வீதம் செறிவூட்டப்பட்ட அரிசி கலக்க வேண்டியுள்ளது. இதற்காக அந்த ஒப்பந்ததாரர்கள் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு டெல்லிக்கு அரிசியை அனுப்பியுள்ளனர்.

டெல்லியில் உள்ள குவாலிட்டி கண்ட்ரோல் அதிகாரிகள் அதனை கம்ப்யூட்டரில் ஆய்வு செய்து அவர்கள் அறிக்கை தந்த பிறகு தான் செறிவூட்டப்பட்ட அரிசி கலக்க முடியும். இதுவரை மத்திய அரசிடம் இருந்து அந்த அனுமதி வரவில்லை. அனுமதி வந்த பிறகு செறிவூட்டப்ட்ட அரிசி கலக்கப்பட்டு விடும். எனவே நெல் மூட்டைகள் தேங்கியது. இதற்கு மத்திய அரசுதான் காரணம். இது தெரியாமல் எதிர்க்கட்சித் தலைவர் கே.பழனிசாமி ஏதேதோ பேசி வருகிறார். இவ்வாறு அவர் கூறினார்.

செறிவூட்டுதல்: ‘நாம் உண்ணும் உணவின் ஊட்டச்சத்துத் தரத்தை மேம்படுத்தும் வகையில், தேவையான நுண்ணூட்டச் சத்துக்களின் உள்ளடக்கத்தைத் திட்டமிட்ட வகையில் அதிகரிப்பதே’ செறிவூட்டல் என இந்திய உணவுப் பாதுகாப்பு, தர நிர்ணய ஆணையம் (FSSAI) வரையறை செய்துள்ளது. இந்த அரிசியில் இரும்பு, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி12 ஆகிய ஊட்டச்சத்துகள் செயற்கையாக ஏற்றப்படும்.

வைட்டமின்கள், தாதுக்கள் உள்ளிட்ட பல நுண்ணூட்டச் சத்துப்பொருள்கள் கொண்ட செயற்கையான செறிவூட்டும் கலவை (பிரிமிக்ஸ்) இதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வேதிப்பொருள் கலவையும், மாவாக்கப்பட்ட அரிசியும் சேர்க்கப்படும். பிறகு, இந்த மாவு அரிசி வடிவில் மீண்டும் இயந்திரங்களில் வார்த்தெடுக்கப்படுகிறது. சாதாரண அரிசியுடன் 100:1 என்ற விகிதத்தில் இந்தச் செறிவூட்டப்பட்ட அரிசி மணிகள் கலக்கப்படுகின்றன.

# புதுச்சேரியில் விடியவிடிய கனமழை: 11.84 செமீ பதிவு இந்திராகாந்தி சதுக்கத்தில் வடியாத வெள்ளம்



புதுச்சேரி, அக்.23-

விடிய விடிய பெய்த கனமழையால் புதுச்சேரியில் 11.84 செமீ மழை அளவு பதிவானது. மழை நின்றும் நகரின் முக்கியமான இந்திராகாந்தி சதுக்கத்தில் வடியாத வெள்ளத்தால் மக்கள் பாதிப்படைந்தனர்.

புதுவையில் கடந்த 16ம் தேதி முதல் வடகிழக்கு பருவமழை பெய்ய தொடங்கியுள்ளது. நேற்று அதிகாலை முதல் தொடர் மழை பெய்தது. பகல் பொழுதில் மட்டும் 2.86 செமீ மழை பதிவானது. மதியத்துக்கு பின் மழை பெய்யவில்லை. ஆனால் இரவில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. இதனால் புதுச்சேரி பள்ளி, கல்லூரிகளுக்கு புதன்கிழமை விடுமுறை விடப்பட்டது. இரவு 7 மணிக்கு மேல் சுமார் 3 மணி நேரம் தொடர்ந்து கனமழை கொட்டி தீர்த்தது. இதனால் நகரெங்கும் சாலைகளில் மழைநீர் தேங்கியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி குளம் போல நின்றது.

புதுச்சேரி நகரச் சாலைகள் வெள்ளக் காடானது. அதேபோல் கடலூர் மற்றும் விழுப்புரம் சாலைகளும் வெள்ளக்காடானது. தாழ்வான பகுதிகளில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் அந்தந்த பகுதி மக்கள் சிரமத்துக்கு ஆளாகினர். வீடுகளுக்குள் புகுந்த தண்ணீரை பொதுமக்கள் வாரி இரைத்து வெளியேற்றினர். தொடர்ந்து இரவு முழுவதும் அவ்வப்போது மழை கொட்டியது. இரவில் மட்டும் 11 செமீ மழை பதிவானது.

ஒட்டுமொத்தமாக 24 மணி நேரத்தில் புதுவையில் 14.7 செமீ மழை பதிவாகியது. மழை பாதிப்புகளை அறிந்த முதல்வர் ரங்கசாமி, நகரின் பல்வேறு இடங்களுக்கு காரில் சென்று மழை பாதிப்புகளை பார்வையிட்டார். மழைநீர் வெளியேற்றவும், பாதுகா ப்புக்கு தேவையான நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இன்று அதிகாலை முதல் மழை இல்லை. இதனால் பெரும்பாலான சாலைகள், தாழ்வான பகுதிகளில் இருந்து மழை நீர் வெளியேறியது. வானம் வெறிச்சோடி காணப்பட்டு வெயில் அடிக்க தொடங்கியது. இதனால் சாலைகள் காய தொடங்கியது.

மழை நின்றும் இந்திராகாந்தி சதுக்கத்தில் வடியாத வெள்ளம்: நகரின் முக்கியப் பகுதியான இந்திராகாந்தி சதுக்கத்தில் கனமழை பெய்யும்போது முழங்கால் அளவுக்கு தண்ணீர் தேங்கி சாலைகளில் பெருக்கெடுத்து ஓடும். இதை தடுப்பதற்காக அண்ணா நகரில் வாய்க்காலை அகலப்படுத்தி பெரியவாய்க்காலுடன் இணைந்தனர்.

இதனால் மழைநீர் தேங்காது என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில் நேற்று இரவு விடிய, விடிய தொடர் கனமழை பெய்தது. இதில் நகரப் பகுதி முழுவதும் சாலைக ளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால் காலையில் மழை நின்றதும் பெரும்பாலான பகுதிகளில் மழைநீர் வடிந்தது. தாழ்வான பகுதிகளிலும் தேங்கிய மழைநீர் வெளியேறியது.

அதேநேரத்தில் இந்திராகாந்தி சதுக்கத்தில் நான்கு புறமும் தேங்கிய மழை வெள்ளம் வடியவில்லை. இதனால் அப்பகுதி வழியாக சென்ற வாகனங்கள் ஊர்ந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்திராகாந்தி சதுக்கம் அருகே உள்ள பஸ்நிறுத்தத்தில் மழைநீர் தேங்கி நின்றது. அப்பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. அப்பகுதியிலிருந்த வணிக நிறுவனங்களின் பார்க்கிங் பகுதியிலும் தண்ணீர் புகுந்திருந்தது.




மாவட்ட அளவிலான மாபெரும் கல்விக்கடன் வழங்கும் விழாவில்

## 218 மாணவ,மாணவிகளுக்கு ரூ.2.68 கோடிக்கான கல்விக்கடன் உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வழங்கினார்

இராமநாதபுரம், அக்.23-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட முன்னோடி வங்கியின் மூலம் மாணவ, மாணவிகளுக்கான மாபெரும் கல்விக்கடன் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், தலைமையேற்று மாணவ, மாணவிகளுக்கு கல்விக்கடன் வழங்கியும், மேலும் மாணவர்களிடம் மனுக்கள் பெற்று தெரிவிக்கையில்,

கல்விக்கடன் திட்டத்தின் நோக்கம் ஒவ்வொரு மாணவ, மாணவிகளும் தங்களது இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் உயர்க்கல்விபெற கல்விக்கடன் உதவிகளை பெற்று பயன்பெறவேண்டும் என்ற வகையில் வங்கிகள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் மாவட்ட த்தில் கடந்த ஆண்டு ரூ.20 கோடி கல்விக் கடனாக மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் நடப்பாண்டில் 27 முகாம்கள் பல்வேறு கல்லூரிகளில் நடத்தப்பட்டு இதுவரை 683 மாணவ, மாணவிகளுக்கு ரூ.16.27 கோடி கல்விக்கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இன்று 218 மாணவ, மாணவிகளுக்கு ரூ.2.68 கோடி கல்விக்கடன் வழங்கப்படுகிறது. இதுபோல் மாணவர்கள் கடனுதவி பெற சிறப்பு முகாம்கள் கல்லூரிகள் அளவில் நடத்தப்பட்டு உயர்க் கல்விக்கு ஏற்ப கல்விக்கடன் வழங்கப்படுகிறது. இது மட்டுமின்றி மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்லூரிகளுக்கே வங்கி அலுவலர்கள் வரவழைக்கப்பட்டு சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. கல்லூரி நிர்வாகங்கள் இதுபோன்ற வாய்ப்புகளை பயன்படுத்தி மாணவ, மாணவிகள் கல்விக்கடன் உதவிகள் பெற்று பயன்பெற உறுதுணையாக இருந்திடவேண்டும். மேலும் மாணவ, மாணவிகள் தங்கள் இலட்சிய கனவை நிறைவேற்றிட இதுபோன்ற திட்டங்கள் மிக பயனுள்ளதாக இருக்கும். எனவே மாணவ, மாணவிகள் கல்விக் கடன் திட்ட உதவிகளை பெற்று உயர்க்கல்வி வரை படித்து பயன்பெற்றிட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், மாணவ, மாணவிகளுக்கு கல்விக்கடன் உதவிகளுக்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சமூக பாதுகாப்பு திட்ட தனித்துறை ஆட்சியர் திருமதி.கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கார்த்திக்கேயன் அவர்கள், உதவி மேலாளர் திரு.அசோக் அவர்கள்;, அனைத்து வங்கிகளை சார்ந்த மேலாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

வங்கி கடன் பெற்று திரும்ப செலுத்திய மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில்,

## 2% வட்டி மானியத்துடன் தொழில் கடன் வழங்கப்பட்டு வருகிறது மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக்.23-

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவத்தின் கீழ் செயல்படும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவைகளின் மூலம் கிராம ஊராட்சி பகுதிகளில், மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த பெண்கள் தலைமையில், தொழில் நிறுவனங்களை உருவாக்கும் உன்னத நோக்கத்தோடு, மகளிர் சுய உதவிக்குழுவில் 2 வருட உறுப்பினர் வங்கி கடன் பெற்று திரும்ப செலுத்திய அனுபவம் பெற்ற, 18 முதல் 55 வயதுடைய அனைத்து மகளிரும் பயன்பெறும் வகையில், வங்கிகள் மூலம் 2% வட்டி மானியத்துடன் தொழில் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இத்தொழில் கடன் பெற ஆர்வமுள்ள மகளிர், தங்கள் ஊராட்சியில் உள்ள ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பணியாளர்களான தொழில்சார் சமூக வல்லுநர்கள் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

மேலும், விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் செயல்படும் காளையார்கோவில், தேவ கோட்டை மற்றும் மானாமதுரை வட்டாரங்களில் முறையே வருகின்ற 23.10.2025, 24.10.2025 மற்றும் 25.10.2025 ஆகிய தேதிகளில், அந்தந்த வட்டார இயக்க மேலாண்மை அலுவலகத்தில் நடைபெறும் விண்ணப்பங்கள் சேகரிக்கும் முகாம்களில் சமர்ப்பித்திடல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ள முகாம்களுக்கு வருகை புரியும் ஆர்வமுள்ள மகளிர்கள் ஆதார் அட்டை, குடும்ப அட்டை, புகைப்படம் 2, பான் அட்டை, கடன் பெற விரும்பும் வங்கி கணக்கு புத்தகம் மற்றும் இதர தொழில் சம்மந்தமான ஆவணங்களுடன் வருகைபுரிதல் வேண்டும்.

தொழில் கடன் குறித்த கூடுதல் விபரங்களுக்கு காளையார்கோவில் வட்டார அணித்தலைவர் அவர்களை 8754080921 என்ற அலைபேசி எண்ணிலும், தேவகோட்டை வட்டார அணித்தலைவர் அவர்களை 9786698846 என்ற அலைபேசி எண்ணிலும், மானாமதுரை வட்டார அணித்தலைவர் அவர்களை 9092262696 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

ரோகு மற்றும் மிர்கால் மீன் விரலிகளை வாங்க விரும்பும் மீன் வளர்ப்போர்

## உள்நாட்டு மீனவர்கள் மற்றும் கண்மாய்களில் மீன் பாசி குத்தகை எடுப்போர், பிரவலூர் அரசு மீன் விதை வளர்ப்பு பண்ணையினை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்

சிவகங்கை, அக்.23-

சிவகங்கை மாவட்டம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள பிரவலூர் அரசு மீன்விதை வளர்ப்பு பண்ணையில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், தற்போது ரோகு மற்றும் மிர்கால் மீன்விரலிகள் கையிருப்பில் உள்ளன. எனவே, மாவட்டத்தில் உள்ள மீன் வளர்ப்போர் மற்றும் உள்நாட்டு மீனவர்கள் கண்மாய்களில் மீன்பாசி குத்தகை எடுப்போர் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் மீன்விரலிகளை வாங்கி பயன்பெறலாம்.

எனவே, மீன் விரலிகளை வாங்க விரும்பும் மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் பிரவலூர் அரசு மீன்விதை வளர்ப்பு பண்ணை, கீழப்பூங்குடி ரோடு, ஒக்கூர் சிவகங்கை என்ற முகவரியில் நேரிலோ அல்லது மீன்வள ஆய்வாளர் அவர்களை 9384824553 என்ற அலைபேசி எண்ணிலும், மீன்வள மேற்பார்வையாளர் தரம் மிமி அவர்களை 9790656919 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## வேலூரில், ஏ.கே. குரூப்ஸ் நட்சத்திர கூட்டரங்கில், பாரதிய ஜனதா கட்சி பட்டியல் அணி நிர்வாகிகள் அறிமுக விழா





வேலூர், அக்.23-

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த கரகம்புத்தூர், புகழ்பெற்ற ஏ.கே. டிவி. நட்சத்திர பங்ளா கூட்டரங்கில், பாரதிய ஜனதா கட்சி பட்டியல் அணி நிர்வாகிகள் அறிமுக விழா, சமூக உணர்வு மிக சமூக ஆர்வலரும், ஏ.கே.டிஜிட்டல் நெட்வொர்க் குரூப்ஸ் தொழிலதிபரும், ஏ.கே. டி.வி. நிறுவனத் தலைவரும், மாவட்ட பட்டியல் அணி தலைவருமான டாக்டர். எம். சரவணகுமார் தலைமையிலும், மாவட்ட பொதுச் செயலாளர்கள் அ.பீம்ராஜ் வரவேற்புரையில், மதன் முன்னுரையற்றி சிறப்பித்து பதவி அறிமுக விழா நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக மாநில பொதுச் செயலாளர் பி.கார்த்தியாயினி, பட்டியலணி மாநில தலைவர் பெரு.சம்பத்ராஜ், மாவட்டத் தலைவர் வி.தசரதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நிர்வாகிகளை அறிமுகம் செய்து விழாவை சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து பட்டியல அணி மாவட்ட தலைவர் டாக்டர் எம். சரவணகுமார் சார்பில் சிறப்பு அழைப்பாளர்களையும் சிறப்பு விருந்தினர்களையும், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

மேலும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாநில செயலாளர் பி.பாண்டியராஜ், முன்னாள் மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏழுமலை, முன்னாள் ஒரே நாடு பத்திரிக்கை செய்தித்தாள் பொறுப்பாளர் நாகநேரி ஆனந்தன், திருப்பத்தூர் மாவட்ட பட்டியல் அணி தலைவர் ஆர். விஜயபாரதி, (திருப்.மா) இணை அமைப்பாளர் கே.பிரேம்குமார் ஆகியோர் கலந்து கலந்துகொண்டு சிறப்பித்தனர். மாநில மாவட்ட பொறுப்பாளர்கள், முன்னாள் மாநில துணைத் தலைவர் கே.ஜி.குட்டி, மாநில செயலாளர், மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் நாகராஜன், தொழில்துறை வல்லுநர்கள் பிரிவு (கிங் மொபைல்ஸ்) நரேந்திரபாபு, சோசியல் மீடியா மாநில நிர்வாகி, என்.நந்தகுமார், எஸ்.டி. அணி மாவட்ட தலைவர் மருத்துவர் சுரேஷ், மாவட்ட பொதுச் செயலாளர் சரவண குமார், மாவட்டத் துணைத் தலைவர்கள் சக்கரவர்த்தி, ஜெகன்நாதன், மாவட்ட பொதுச் செயலாளர் ஷகிலா ஜெயகுமார், மாவட்ட பொருளாளர் தனசேகர், மாவட்ட பொறுப்பாளர் ரூபாவதி, மாவட்ட பொருளாதார பிரிவு ஆர்.ஆர். ராஜசேகர், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு சுதாகர், மாவட்ட வழக்கறிஞர் இணை அமைப்பாளர் கார்த்திக், வழக்கறிஞர் சீனிவாசன் ஆகியோரை அறிமுகப்படுத்தி இவ்விழாவை சிறப்பித்தனர்.

இந்நிகழ்ச்சியில் அனைத்து பிரிவு மாநில மாவட்ட, பகுதி நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் உறுப் பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஏ.கே. டி.வி. தொழிலதிபரும், சமூக ஆர்வலருமான (பாஜக) பட்டியலனி மாவட்ட தலைவர் டாக்டர். எம்.சரவணகுமார் ஏற்பாட்டில் அறுசுவை மதிய உணவுடன், இனிப்புகள் மற்றும் பட்டாசுகள் வழங்கி, தீபாவளி திருநாள் வாழ்த்து தெரிவித்து சிறப்பித்தார். இறுதியில் பட்டியல் அணி மாவட்ட துணைத் தலைவர் வ.பாண்டியன் நன்றியுரையாற்றி அறிமுக விழா நிறைவுபெற்றது.




■ மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் கூட்டரங்கில் தமிழ் முழக்கம் மேடைப்பேச்சு ஆளுமைத்திறன் மேம்பாட்டுக் பயிற்சி பன்னாட்டு பயிலரங்கத்தை மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகே' பொய்யாமொழி தொடங்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள், மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.தளபதி அவர்கள், உலகத் தமிழ்ச் சங்கம் துணைத் தலைவர்இயக்குநர் முனைவர்.இ.சா.பர்வீன் சுல்தானா அவர்கள், இலக்கியம் மற்றும் ஆன்மிக சொற்பொழிவாளர் திரு.சுகி.சிவம் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



## திருப்போரூர் முருகன் கோயிலில் கந்த சஷ்டி விழா கொடியேற்றத்துடன் தொடக்கம்

திருப்போரூர், அக்.23-

திருப்போரூரில் உள்ள புகழ் பெற்ற முருகன் கோயிலில் ஆண்டுதோறும் ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி விழா சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு கந்தசஷ்டி விழா இன்று புதன்கிழமை காலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் வெகு உற்சாகமாக தொடங்கியது. பக்தர்களின் அரோகரா கோஷத்துடன் கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனைந்தொடர்ந்து காலை பல்லக்கு உற்சவத்திலும், இரவு 7 மணிக்கு கிளி வாகனத்தில் முருகப் பெருமான் வீதி உலாவும், மறுநாள் 23ம் தேதி வியாழக்கிழமை இரவு ஆட்டுக்கிடா வாகனம், 24ம்தேதி வெள்ளிக்கிழமை இரவு புருஷா மிருக வாகனம், 25ம்தேதி சனிக்கிழமை இரவு பூத வாகனம், 26ம்தேதி ஞாயிற்றுக்கிழமை வெள்ளி அன்ன வாகனத்திலும் தினம் ஒரு சூரபொம்மையுடன் மேளதாளம், வான வேடிக்கைகளுடன் வீதி உலா நடைபெறும்.

விழாவின், முக்கிய நிகழ்ச்சியாக 27ம் தேதி திங்கட்கிழமை, மாலை 6 மணி அளவில் முருகப்பெருமான் வெள்ளிக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி தங்கவேல் கொண்டு சூரபத்மனை வதம் செய்யும் நிகழ்ச்சியும், இரவு தங்க மயில் வாகனத்தில் முருகப் பெருமான் வீதி உலா நடைபெறும். இதையடுத்து மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு முருகப்பெருமான் திருக்கல்யாண உற்சவமும், இரவு திருமண கோலத்தில் முருகப்பெருமான் யானை வாகனத்தில் வீதி உலாவும் நடைபெறுகிறது.

கந்தசஷ்டியை ஒட்டி இன்று முதல் தினமும் கோயிலில் லட்சார்ச்சனை நடைபெறுகிறது.விழாவுக்கான ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை உதவி ஆணையர் (தக்கார்) கார்த்திகேயன், செயல் அலுவலர் குமரவேல் ஆகியோர் செய்துள்ளனர்.



## ரூ.121 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் கழிப்பறைகள் மாணவர், மாணவிகளின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது

மதுரை, அக்.23-

மதுரை மாநகராட்சி அனுப்பானடி மாநகராட்சி ஆரம்பப்பள்ளி, திரௌபதியம்மன் எண்.2 ஆரம்பப்பள்ளி ஆகிய பள்ளிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் மானகிரி ஆரம்பப்பள்ளி, செனாய்நகர் நடுநிலை ப்பள்ளி ஆகிய பள்ளிகளில் தூய்மைப் பாரத இயக்கத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட கழிப்பறை கட்டிங்களை மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு ஆணையாளர் திருமதி. சித்ரா விஜயன், இ.ஆ.ப., அவர்கள், துணைமேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள் ஆகியோர் இன்று (22.10.2025) திறந்து வைத்தார்கள்.

மதுரை மாநகராட்சி கட்டுப்பாட்டில் 64 தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி மதுரை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளுக்கு தமிழக அரசால் வழங்கப்படும் விலையில்லா பாடப்புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், சீருடைகள், காலணிகள் மற்றும் மாநகராட்சி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் காலை உணவுகள் வழங்கப்படுகிறது. மேலும் மாநகராட்சி பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், நூலக கட்டிடம், அறிவியல் கூடங்கள், அங்கன்வாடி மையங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி மண்டலம் 4 வார்டு எண்.88 அனுப்பானடி மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் ரூ.52 லட்சம் மதிப்பீட்டில் 3 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள், திரௌபதியம்மன் எண்.2 ஆரம்பப்பள்ளியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் 2 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் மாநகராட்சி மானகிரி ஆரம்பப்பள்ளியில் தூய்மைப் பாரத இயக்கம் திட்டத்தின்கீழ் ரூ.31 லட்சம் மதிப்பீட்டில் 12 கழிப்பறைகள், செனாய் நகர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் 4 கழிப்பறைகள் என மொத்தம் ரூ.121 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை கட்டிடங்களை மாணவ மாணவிகளின் பயன்பாட்டிற்கு மாநகராட்சி ஆணையாளர் மற்றும் துணைமேயர் ஆகியோர் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்வில் கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன், துணை ஆணையாளர் திரு.ஜெய்னுலாப்தீன், உதவி ஆணையாளர் திரு.மணிமாறன், கல்வி அலுவலர் திரு.ஜெய்சங்கர், மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.பிரேமா, திருமதி. வசந்தாதேவி மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உலகின் மாசுபட்ட நகரங்கள்: முதலிடத்தில் டெல்லி



புதுடெல்லி, அக்.23-

உலகின் மாசுபட்ட நகரங்கள் பட்டியலில் டெல்லி முதலிடத்தில் உள்ளது.

சுவிஸ் காற்று தர தொழில்நுட்ப நிறுவனமான ஐகியூஏர்ன் (மினிகி வீகூஷீ) உலக காற்று தர அறிக்கை 2025 தற்போது வெளியாகி உள்ளது. இந்தப் பட்டியலில் நம் நாட்டின் தலைநகரமான டெல்லி முதலிடத்தைப் பிடித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி டெல்லியின் காற்று தரக்குறியீடு (ஏகியூஐ) 350 ஆக உள்ளது.

இதன்மூலம் உலகில் மிகவும் மோசமாக மாசுபட்ட நகரங்கள் பட்டியலில் முதலிடத்தை டெல்லி மாநகரம் பிடித்துள்ளது. இந்தியாவில் காற்று மாசுபாடு கடுமையான சுகாதார அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இதனால், இந்தியர்களின் ஆயுள் காலம் 5.2 ஆண்டுகள் குறைகிறது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல் இந்தப் பட்டியலில் மும்பை 5வது இடத்தையும், கொல்கத்தா 8வது இடத்தையும் பிடித்துள்ளது. இந்தப் பட்டியலில் பாகிஸ்தானின் லாகூர் 2வது இடத்தையும், கராச்சி 4வது இடத்தையும் பெற்றுள்ளது.



■ வடகிழக்கு பருவமழை முன்னிட்டு மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் திரு.த.மோகன் இ.ஆ.ப., கடலூர் வட்டம், நத்தவெளிரோட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் குறித்து இன்று (22.10.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) ஷபானா அஞ்சும் உட்பட பலர் உள்ளனர்.

# வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு நடைபெற்றுவரும் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் த.மோகன் பல்வேறு இடங்களில் ஆய்வு



கடலூர், அக்.23-

மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் திரு.த.மோகன் இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட வண்ணான் குட்டை, பரமன் குட்டை மற்றும் புருஷோத்தமன் நகர், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாதிரிக்குப்பம், கே.என்.பேட்டை, எஸ்.எஸ். ஆர் நகர், நத்தவெளி ரோடுசின்னவாய்க்கால், நத்தப்பட்டு, கோண்டூர், நத்தப்பட்டு கோண்டூர், வண்டிப்பாளையம், குண்டு உப்பலவாடி ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்ததாவது,

வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு நேற்று பெய்த கனமழையினால் கடலூர் மாவட்டத்தில் வண்ணான் குட்டை, பரமன் குட்டை மற்றும் புருஷோத்தமன் நகர், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாதிரிக்குப்பம், கே.என்.பேட்டை, எஸ்.எஸ். ஆர் நகர், நத்தவெளி ரோடுசின்னவாய்க்கால், நத்தப்பட்டு, கோண்டூர், நத்தப்பட்டு கோண்டூர், வண்டிப்பாளையம், குண்டு உப்பலவாடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அதிகப்படியான மழைநீர் தேங்கியது. வடிகால் வசதிகள் முறையாக பராமரிக்கப்பட்டதன் மூலம் மழை நின்றவுடன் தண்ணீர் மட்டம் குறைந்தது.

தாழ்வான பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீர் மோட்டார் பம்பு செட்டுகள் மூலம் தொடர்ந்து வெளியேற்றப்பட்டன. பொதுமக்களின் சுகாதாரத்தினை பாதுகாத்திடவும், நோய் தொற்று பரவாமல் தடுப்பதற்கும் தற்போது மழைநீர் வடிந்த பகுதிகளில் பிளிச்சிங் பவுடர் தெளிக்கப்படுகின்றன.

நேற்று பெய்த கனமழையின் காரணமாக 4 நபர்களுக்கு பாதிப்பும், 6 கால்நடைகளுக்கு இறப்பும் ஏற்பட்டுள்ளது. 22 குடிசைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. இன்றைய தினம் சுவர் இடிந்து ஆண்டார் முள்ளிப்பள்ளத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். மேற்படி இறப்புக்கு நிவாரண நிதியுதவி உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கனமழை பெய்ய நேரிடும் பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு மையங்கள், புயல் பாதுகாப்பு மையங்கள், கிராம அளவில் சமுதாய கூடங்கள், பள்ளிக் கூடங்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளில் மருந்துகள் போதிய அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தென்பெண்ணையாற்றின் மூலம் சென்ற ஆண்டு பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கூடுதல் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்தார்.

ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார் இ.கா.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் திருமதி ஆட்சியர் ர.அ.பிரியங்கா, மாநகராட்சி ஆணையாளர் திரு.முஜீபூர் ரஹ்மான், உதவி இயக்குநர் ஊராட்சிகள் ஷபானா அஞ்சும் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# சாத்தூர் அருகே உடைந்த வைப்பாறு தரைப்பாலத்தை சரி செய்யக் கோரி கிராம மக்கள் போராட்டம்

சாத்தூர், அக்.23-

சாத்தூர் அருகே வைப்பாறு தரைப்பாலம் உடைந்து முற்றிலுமாக சேதமடைந்ததால் பாலத்தை உடனடியாக சரி செய்யக்கோரி ஆற்றில் இறங்கி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாத்தூர் அருகே உள்ள இரவார்பட்டி அச்சங்குளம் இடையே வைப்பாறு ஓடுகிறது. இவ்விரு கிராமங்களையும் இணைக்கும் வகையில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு வைப்பாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்டப்பட்டது. இப்பாலம் திறக்கப்பட்ட 3 மாதங்களில் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டு ஒரு பகுதி சேதம் அடைந்தது. அப்போது முதல் தற்போது வரை பாலம் சீரமைக்கப்படவில்லை.

இந்த தரைப் பாலம் வழியாகவே அச்சங்குளம் கிராமத்தில் உள்ள 126 குடும்ப அட்டைதாரர்களும் ஆற்றை கடந்து சென்று இரவார்பட்டியில் உள்ள ரேஷன் கடைக்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களை வாங்கி வருகின்றனர். ஆனால், ஆண்டுதோறும் வெம்பக்கோட்டை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடும்போதெல்லாம் இந்த தரைப்பாலத்தை கடக்க முடியாமலும், அவசரத் தேவைக்காக சென்று வர முடியாமலும் கிராம மக்கள் தவித்து வருகின்றனர்.

ஆற்றில் சற்று தண்ணீர் குறைந்தால் தரைப்பாலம் வழியாக கிராம மக்கள் சற்று ஆபத்தான நிலையில் நடந்தே ஆற்றைக் கடந்து சென்று வருகின்றனர். தண்ணீர் அதிகமாகச் செல்லும் போதெல்லாம் அச்சன்குளம் கிராமத்தினர் சாத்தூர் அல்லது வெம்பக்கோட்டை வழியாக 25 கி.மீட்டர் சுற்றிச் சென்று இரு பேருந்துகள் ஏறிச்சென்று இரவார்பட்டியில் உள்ள ரேசன் கடைக்குச் சென்று வருகின்றனர். அண்மையில் பெய்த தொடர் மழையால் அணைகள் நிரம்பியுள்ளதால் தற்போதும் வைப்பாறில் தண்ணீர் பெருக்கெடுத்துச் செல்கிறது.

உடைந்த தரைப் பாலத்தை சரி செய்து கொடுக்குமாறு பலமுறை அரசு அதிகாரிகளிடம் மனுக்கொடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. இதைக் கண்டித்து அச்சங்குளம் பகுதி பொதுமக்கள் உடைந்த தரைப் பாலத்தில் அமர்ந்தும், வைப்பாற்றில் இறங்கியும் இன்று போராட்டத் தில் ஈடுபட்டனர்.



# சென்னையில் தீபாவளி பண்டிகையை ஒட்டி கடந்த 3 நாட்களில் 226 டன் பட்டாசு கழிவு அகற்றம்

சென்னை, அக்.23-

தீபாவளிப் பண்டிகையை ஒட்டி சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த 3 நாட்களில் 225.87 டன் பட்டாசு கழிவு அகற்றப்பட்டுள்ளதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

நடப்பு ஆண்டு தீபாவளிப் பண்டிகைக்கு வழக்கத்தை விட தமிழகத்தில் அதிகளவில் பட்டாசு விற்பனை நடந்துள்ளதாக பட்டாசு விற்பனையாளர்கள்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதை உறுதிப்படுத்தும் வகையில் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் பட்டாசு வெடித்து சென்னை மக்கள் இந்த தீபாவளியை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கொண்டாடியுள்ளனர். அந்த வகையில் கடந்த அக்.19, அக்.20 மற்றும் அக்.21 ஆகிய 3 நாட்களில் சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் 225.87 டன் பட்டாசு கழிவுகளை சேகரித்து, அவற்றை பதப்படுத்தி அழிப்பதற்காக கும்மிடிப்பூண்டி மையத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் அதிகபட்சமாக வளசரவாக்கம் மண்டலத்தில் 24.08 டன் கழிவும், கோடம்பாக்கம் 20.45 டன், தேனாம்பேட்டை19.84 டன், திருவிக நகர்17.70 டன், தண்டையார்பேட்டை திருவொற்றியூரில் 17.33 டன், ஆலந்தூர் மண்டலத்தில் 13.09 டன், பெருங்குடி மண்டலத்தில் 12.33 டன், ராயபுரம் மண்டலத்தில் 11.95 டன் கழிவுகளும் மாநகராட்சி பணியாளர்களால் இரவு, பகலாக அகற்றப்பட்டுள்ளன. சென்னையில் மிக குறைந்தபட்சமாக அண்ணா நகரில் 7.18 டன பட்டாசு கழிவு சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.



# பழநி முருகன் கோயிலில் கந்தசஷ்டி விழா தொடக்கம்: அக்.27ல் சூரசம்ஹாரம்

பழநி, அக்.23-

திண்டுக்கல் மாவட்டம் பழநி முருகன் கோயிலில் கந்தசஷ்டி திருவிழா காப்பு கட்டுதலுடன் புதன்கிழமை (அக்.22) தொடங்கியது. அக்.27ம் தேதி மாலை சூரசம்ஹாரமும், அக்.28ம் தேதி திருக்கல்யாணமும் நடைபெற உள்ளது.

தமிழ் கடவுள் முருகனின் அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழநி தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் கந்தசஷ்டி விழா புதன்கிழமை இன்று (அக்.22) பகல் 12 மணிக்கு உச்சிகாலத்தில் காப்பு கட்டுதலுடன் தொடங்கியது. இதையொட்டி, மூலவர், விநாயகர், சண்முகர், மயில், துவார பாலகருக்கு காப்பு கட்டப்பட்டது. இணை ஆணையர் மாரிமுத்து, உதவி ஆணையர் லட்சுமி, அறங்காவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவையொட்டி, யானை கஸ்தூரி, யானை பாதை வழியாக மலைக்கோயிலுக்கு சென்று, சூரசம்ஹாரம் வரை மலைக்கோயிலில் தங்கியிருக்கும். வயது முதிர்வு காரணமாக, நடப்பாண்டில் யானை கஸ்தூரி மலைக்கோயிலுக்கு செல்லவில்லை.

விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் அக்.27ம் தேதி மாலை நடைபெறவுள்ளது. அன்று அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்படும். மாலை 5.30 மணிக்கு நடக்க வேண்டிய சாயரட்சை பூஜை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

மாலை 3 மணிக்கு சின்னக் குமார சுவாமி அசுரர்களை வதம் புரியும் பொருட்டு மலைக்கொழுந்து அம்மனிடம் வேல் வாங்குதல் நிகழ்ச்சியுடன் சன்னதி அடைக்கப்படும். தொடர்ந்து, திரு ஆவினன்குடி கோயிலில் பராசக்தி வேலுக்கு பூஜை செய்யப்பட்டு, மாலை 6 மணிக்கு மேல், வடக்கு கிரி வீதியில் தாரகா சூரன் வதமும், கிழக்கு கிரி வீதியில் பானுகோபன் சூரன் வதமும், தெற்கு கிரி வீதியில் சிங்கமுகாசூரன் வதமும், மேற்கு ரதவீதியில் சூரபத்மன் வதமும் நடைபெற உள்ளது.

இரவு 9 மணிக்கு ஆரியர் மண்டபத்தில் வெற்றி விழாவை தொடர்ந்து, சுவாமி மலைக்கோயிலுக்கு சென்று சம்ப்ரோட்சணம் பூஜை நடைபெறும். விழா நிறைவாக அக்.28ம் தேதி காலை 10.30 மணிக்கு மேல் மலைக்கோயிலில் வள்ளி தேவசேனா சமேத சண்முகருக்கும், இரவு 7 மணிக்கு மேல் பெரிய நாயகியம்மன் கோயிலில் வள்ளி தேவசேனா சமேத முத்துக்குமாரசுவாமிக்கும் திருக்கல்யாணம் நடைபெற உள்ளது.

# தமிழ்நாடு முதலமைச்சருக்கு இராமநாதபுரம் விவசாயிகள் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்தனர்




இராமநாதபுரம், அக்.23-

வேளாண்மை உழவர் நலத்துறையின் மூலம் விவசாயப் பெருமக்களின் வாழ்வில் ஏற்றம் காணும் வகையில் மானியத்துடன் கூடிய பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், பருத்தி உற்பத்தி பெருக்க திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்க திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றிடும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில வேளாண் வளர்ச்சி திட்டமானது வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் கோடை உழவு செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக ரூ.800 வீதம் ஏக்கருக்கு வழங்கப் படுகின்றது. நடப்பாண்டு 2025-2026ல் இருபதாயிரம் ஏக்கர் கோடை உழவு செய்திட இலக்கு பெறப்பட்டு சாதனை எய்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் பயன்பெற மானாவரி சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் தகுதியுடையவர்கள். ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை கோடை உழவு பயனை பெறலாம். உழவர் செயலி மற்றும் அக்ரிஸ்நெட் வளைதளத்தில் பதிவு செய்த பயனாளிகளின் மூப்புரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் வட்டாரத்தில் 1180 ஏக்கர், திருப்புல்லாணி 840 ஏக்கர், உச்சிப்புளி 270 ஏக்கர், திருவாடானை 2772 ஏக்கர், ஆர்.எஸ். மங்கலம் 2580 ஏக்கர், பரமக்குடி 1000ஏக்கர், நயினார்கோவில் 1645 ஏக்கர், போகலூர் 1105 ஏக்கர், கமுதி 2580 ஏக்கர், முதுகுளத்தூர் 3090 ஏக்கர் மற்றும் கடலாடி 2938 ஏக்கர் பரப்பிற்கு 100 சதவீதம் மானியத்தில் மாநில வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் மூலம் நடப்பாண்டில் 5600 பயனாளிகள் கோடை உழவு மானியம் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

மாநில வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் கோடை உழவு மானியம் பெற்ற விவசாயி தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் சுப்பிரமணியன். நான் இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோயில் வட்டாரம், தாளயடிக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகின்றேன். நான் 5 ஏக்கர் நிலத்தில் சம்பா பருவத்தில் நெற்பயிரிடுவது வழக்கம். இந்த வருடம் கோடைப்பருவத்தில் கோடை உழவு செய்திட மானியம் கிடைத்ததில் 5 ஏக்கர் பரப்பிற்கு கோடை உழவு செய்து ரூ.4000ஃ மானியம் பெற்றுள்ளேன். நான் இப்பொழுது கோடை உழவு செய்த நிலத்தில் நெல் விதைக்கப்பட்டு நல்ல முறையிலே நெற்பயிர்களில் பூச்சிகள் நோய்கள் இல்லாமல் வளர்வதை கண்கூடாக பார்க்க முடிகின்றது.

மேலும் விதைப்பிற்கு முன்னர் உழவு பணியும் சுலபமாக இருந்தது. இதனால் உற்பத்தி செலவு குறைந்து பூச்சி நோய்களின் தாக்குதல் குறைந்து அதிக மகசூல் பெற வழிவகை செய்யும் மாநில வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் கோடை உழவு மானியம் அறிவித்து என்னைப் போன்ற கடைக்கோடி விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயலாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும் என்னைப் போன்ற விவசாயிகள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

# தீபாவளி போனஸ் தராததால் அதிருப்தி: ஆக்ரா லக்னோ சுங்கச்சாவடியை திறந்துவிட்ட ஊழியர்கள்

ஆக்ரா, அக்.23-

தீபாவளி போனஸ் தராததால் அதிருப்தி அடைந்த சுங்கச்சாவடி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். இதனால் மத்திய அரசுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

ஆக்ரா லக்னோ எக்ஸ் பிரஸ் சாலையில் பதேஹாபாத் பகுதியில் சுங்கச் சாவடி உள்ளது. இங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு தீபாவளி போனஸ் வழங்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் அதிருப்தி அடைந்த ஊழியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆக்ரா லக்னோ எக்ஸ்பிரஸ் சாலையில் சுங்கச் சாவடியை வாகனங்கள் கடப்பதற்கு வசதியாக அனைத்து கதவுகளையும் திறந்து விட்டனர்.

அதில் இருபுறமும் வாகனங்கள் அவசர அவசரமாக கடந்து செல்லும் காட்சிகள் அடங்கிய வீடியோ வைரலாயின. ஆக்ரா லக்னோ எக்ஸ்பிரஸ் சாலை மட்டுமன்றி டெல்லி செல்லும் யமுனா எக்ஸ்பிரஸ் சாலையையும் திறந்துவிட்டனர்.

சுங்கச் சாவடி ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் மத்திய அரசுக்கு பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் கூறும்போது, ‘‘நாங்கள் பல ஆண்டுகளாக பணிபுரிகிறோம். ஆனால், எங்களுக்கு எந்த போனஸ் வழங்கவில்லை. சம்பளத்தை கூட சரியான தேதியில் தருவதில்லை. இப்போது எங்களுக்குப் பதில் வேறு ஊழியர்களை பணியமர்த்த போவதாக நிறுவனம் கூறுகிறது’’ என்றனர்.

இதனிடையே, இந்த சுங்கச் சாவடியை நிர்வகிக்கும் சாய் மற்றும் ததார் நிறுவனம் சார்பில் போனஸ் வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டதால் போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

மாலை தந்தி

வியாழக்கிழமை 23.10.2025



# மாவட்ட ஆட்சியரகத்தில் வேலூர் எம்.பி. கதிர் ஆனந்த் தலைமையில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு கூட்டம்

## மாவட்ட ஆட்சியர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்பு

வேலூர், அக்.23-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் குழுவின் தலைவர் / வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் தலைமையிலும், உறுப்பினர் செயலர்/ மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி முன்னிலையிலும், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன் (வேலூர்), வி.அமுலு விஜயன் (குடியாத்தம்) எம்.ஜெகன்மூர்த்தி (கீ.வ.குப்பம்), அ.செ. வில்வநாதன் (ஆம்பூர்), மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட வன அலுவலர் அசோக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் த.மாலதி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா மற்றும் அனைத்து துறைகள் சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகராட்சி, ஓட்டேரி, 53வது வார்டில், மாமன்ற உறுப்பினர் (பா.ம.க) பாபி கதிரவன் தலைமையில்

# தூய்மை பணியாளர்களை கடவுளாக வணங்கி, உழைக்கும் கரங்கள் விருது, பரிசுத்தொகை, இனிப்பு பலகாரங்கள் மற்றும் நலதிட்டங்கள் வழங்கும் விழா

வேலூர், அக்.23-

வேலூர் மாநகராட்சி, ஓட்டேரி, 53வது வார்டில், சுவாமி நகர், முத்துமாரியம்மன் கோவில் வளாகத்தில், பாட்டாளி மக்கள் கட்சியின் மாநகர வீரமங்கை, மக்கள் பணியில் முழு நேர சிந்தனையுடன் துணிச்சல் மிகு. சமூக ஆர்வலரும், பா.ம.க. மாமன்ற உறுப்பினருமான பாபி கதிரவன் தலைமையில், தூய்மைப் பணியாளர்களை கடவுளாக வணங்கி, உழைக்கும் கரங்கள் விருது, பரிசுத்தொகை, இனிப்புகள், பண்டிகை கால பாரம்பரிய இனிப்பு தின்பண்டங்கள் உள்ளிட்ட நலதிட்டங்கள் வழங்கும் விழா அனைவரும் பாராட்டும் வகையில் சிறப்பாக நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக பாகாயம், காவல் உதவி ஆய்வாளர் புவனேஸ்வரி, சத்ரியன் பிலிம் இண்டஸ்ட்ரி நிறுவனரும், வழக்கறிஞருமான ஜெய்ஸ்ரீ, களப்பணி கால்நடை மருத்துவரும், கால்நடை சமூக ஆர்வலருமான ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்து தூய்மை பணியாளர்களை பாராட்டி வணங்கி, வாழ்த்து தெரிவித்து, உழைக்கும் கரங்கள் விருது வழங்கியதுடன், நலத்திட்டங்களையும் வழங்கினர். இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களையும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளாரையும், பொன்னாடை போர்த்தி கௌரவித்து சிறப்பிக்கப்பட்டது. இநிகழ்ச்சியில் திரளான தூய்மை பணியாளர்கள், தூய்மை பணி சார்ந்த அனைத்து பிரிவு பணியாளர்கள் மற்றும் சமூக உணர்வுமிகு சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.




# தாம்பரத்தில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு மழை கோர்ட், இனிப்பு வழங்கி கவுரவித்தனர்

தாம்பரம், அக்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் 50வது வார்டு ரங்கநாதபுரத்தில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் வடகிழக்கு பருவமழையால் கொட்டும் மழையிலும் தூய்மை பணியில் ஈடுபடும் மாநகராட்சி தூய்மை பணியாளர்களை கவுர விக்கும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைப்பெற்றது. அதன்படி தூய்மை பணியாளர்கள் 100 பேருக்கு மழை கோர்ட், பிரியாணி, இனிப்புகளை மனித நேய மக்கள் கட்சியின் மாநில துணை பொதுசெயலாளர் தாம்பரம் எம்.யாக்கூப் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சியின் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே.ஜாஹீர் உசேன், மாவட்ட செயலாளர் அப்துல் ரஹீம், பொருளாளர் சபியுல்லா, மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் முஜீபுர் ரஹ் மான், மாநில இளைஞரணி செயலாளர் தமிம் அன்சாரி, மாவட்ட துணை செயலாளர் அப்துல்காதர், மத்திய பகுதிப்தலைவர் ஜலாலுதீன் உள்ளிட்ட மமக, தமுமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# இராணிப்பேட்டை, பூண்டி கிராமம் அருகே தேசிய நெடுஞ்சாலையில் புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி குழும டிவைன் கஃபே உயர்தர சைவ உணவக ஹோட்டல் திறப்பு விழா

## துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று திறந்து வைப்பு

ராணிப்பேட்டை, அக். 23-

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா தாலுகா, பூண்டி கிராமம் ஆலப்பாக்கம் சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை அருகே, புகழ்பெற்ற ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி குழும, டிவைன் கா்ஃபே உயர்தர சைவ உணவகம் ஹோட்டல் திறப்பு விழா, ஸ்ரீ சுகி பார்மா மற்றும் டிவைன் கஃபே இயக்குநர்கள் ஸ்ரீநாத், ஸ்ரீகாந்த் ஆகியோர் தலைமையிலும், ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் இயக்குனர் டாக்டர். என்.பாலாஜி முன்னிலையிலும் இவ்விழா நடைபெற்றது.



இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

சிறப்பு விருந்தினர்களாக வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், ரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், கலவை சச்சிதானந்தா சுவாமிகள், தன்வந்திரி முரளிதர சுவாமிகள், சித்தஞ்சி சிவகாளி சுவாமிகள் வாலாஜா நகர மன்ற தலைவர் ஹரிணி தில்லை, ஆற்காடு நகர மன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன், தொழிலதிபர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு திறப்பு விழாவினை சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களையும் மற்றும் சிறப்பு விருந்தினர்களையும் நிர்வாகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது ஸ்ரீபுரம் ஸ்ரீ நாராயணி குழும அலுவலர்கள் பணியாளர்கள் டிவைன் கஃபே குழும அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.



# சிவகங்கை மாவட்டம் இடைய மேலூர், எஸ்.புதூர் நிலையத்தில் இன்று (அக்23) மின்தடை

சிவகங்கை, அக்.23-

இடையமேலூர் தமராக்கி, குமாரப்பட்டி, கண்டாங்கிப்பட்டு, மலம்பட்டி, இடையமேலூர், சாலூர், கூட்டுறவுப்பட்டி, மேலப்பூங்குடி, சக்கந்தி, புதுப்பட்டி எஸ்..புதூர் ,வாராப்பூர் மேலவண்ணா யிருப்பு புழுதிப்பட்டி, கட்டுக்குடிப்பட்டி ஆ.தெக்கூர் பூசலங்குடி ஆகிய பகுதிகளிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் இருக்காது என மின் செயற் பொறியாளர்கள் அறிவித்துள்ளார்கள்..




# பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம்

சென்னை, அக்.23-

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆலோசனை கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னை, தாம்பரம், ஆவடி மாநகராட்சியின் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அடங்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர்கள், துணை மேயர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் பகுதி, வட்டக் கழக செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 சார்பாக பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி அவரகள் கலந்து கொண்டார் உடன் மண்டலம் 1 க்கு உட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# டாக்டர் அம்பேத்கர் விருது பெற வருகின்ற 28.11.2025 ஆம் தேதிக்குள் விண்ணப்பத்தினை நேரில் சமர்ப்பித்தல் வேண்டும்

சிவகங்கை, அக்.23-

2025-2026 ஆம் நிதியாண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருது தமிழ் வளர்ச்சிக்கு பாடுபடும் மற்றும் பட்டியல் இனமக்களின் முன்னேற்றத்திற்கு அரிய தொண்டு செய்யும் ஆதிதிராவிடர் இனத்தைச்சார்ந்த தமிழறிஞர்கள், கவிஞர்கள், சான்றோர் ஆகியோர்களில் சிறந்தோர்க்கு, 2026 ஆம் ஆண்டில் திருவள்ளுவர் திருநாளன்று விருதுகள் வழங்குவதற்கு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

டாக்டர் அம்பேத்கர் விருது பெற விரும்பும் தகுதிவாய்ந்த நபர்கள், சிவகங்கை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தை அணுகி உரிய ஆவணங்களுடன், வருகின்ற 28.11.2025 ஆம் தேதிக்குள் விண்ணப்பத்தினை நேரில் சமர்ப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா. பொற்கொடி தெரிவித்துள்ளார்.



# வேலூர் அடுத்து பலவன்சாத்துகுப்பம் ஏரி நிரம்பியது: உபரிநீர் வெளியேறுவதை ஆட்சியர் ஆய்வு

வேலூர், அக்.23-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அணைக்கட்டு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, பலவன் சாத்துகுப்பம் ஏரியிலிருந்து உபரி நீரி வெளியேறுவதை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாநகராட்சி ஆணையர் லெட்சுமணன், வட்டாட்சியர் அ.வடிவேலு, சுகாதார ஆய்வாளர் சிவகுமார், துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



# போடி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் கந்த சஷ்டி விழா தொடக்கம்

தேனி, அக்.23-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் 350 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த பழனியில் இருந்து பிடி மண் எடுத்துக் கொண்டு வந்து கட்டப்பட்டதாக கூறப்படும் அருள்மிகு வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் திருக்கோவிலில் கந்த சஷ்டியை முன்னிட்டு கொடியேற்றம் விழா கோவில் பரம்பரை அறங்கா வலர் TBSSCS. முத்துராஜ் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. ஆயிரகணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பு சாமி தரிசனம் செய்து கங்கனம் கட்டி கந்த சஷ்டி விரதம் ஏற்றனர்.



# சத்திரிய பாசறை தலைவர் ஆதித்யா சம்பத் அவர்களின் பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது

தாம்பரம், அக்.23-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சத்திரிய பாசறை தலைவர் ஆதித்யா சம்பத் அவர்கள் பிறந்த நாளை தனது அலுவலகத்தில் கொண்டாடினர். அவரது பிறந்த நாளை யொட்டி நாடார் சங்கங்களின் கூட்ட மைப்பு தலைவர் மின்னல் ஸ்டீபன் நாடார் தலைமையில் கேக் வெட்டி கொண்டாடினர். அதனை தொடர்ந்து நாடார் சங்கங்களின் கூட்டமைப்பு மாநில பொதுச் செயலாளர் தர்மலிங்கம், தாம்பரம் தொகுதி தலைவர் மார்கெட் ஞானப்பால், கலாம் காமராஜர் கக்கன் அறக்கட்டளை எம்.ஐ.டி வேல்முருகன் மற்றும் கவின்குமார், சுயம்ராஜா ஆகியோர் சத்திரிய பாசறை மாநில தலைவர் ஆதித்யா சம்பத் அவர்களுக்கு சால்வை போற்றி பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். அதனை பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிய நிர்வாகிகளுக்கு ஆதித்யா சம்பத் அவர்கள் தனது நன்றியினை தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161